**https://arimanokku.com/** UGC-CARE LISTED AND PEER REVIEWED JOURNAL
**ISSN: 2320-4842 (Print)** **ISSN: 3049-2688 (Online)**

ARIMA NOKKU
ISSN: 2320 - 4842 (P)
ISSN: 3049-2688 (O)

19-2 April 2025

**Published on 14, April-2025** **ISSN: 3049-2688 (Online)**

# சங்க இலக்கியங்களில் விளையாட்டும் உளவியலும்

**திருமிகு சித்ராதேவி. கு**
உதவிப் பேராசிரியர்
மொழிகள் துறை – தமிழ்ப்பிரிவு,
கற்பகம் உயர் கல்விக் கழகம்
கோயம்புத்தூர் – 641 021.

**ஆய்வுச் சுருக்கம்**

*சங்க இலக்கியங்களில் விளையாட்டு என்பது வெறும் பொழுதுபோக்கு மட்டுமல்ல, அது அக்கால மக்களின் உளவியல், சமூக உறவுகள், பண்பாட்டு மதிப்புகள் பற்றிய பல அம்சங்களை வெளிப்படுத்துகிறது. இன்றைய காலகட்டத்தில் நாம் மறந்து போன பல மனிதநேய குணங்களைச் சங்க இலக்கியங்களில் காணலாம். விளையாட்டு என்பது வெறும் உடற்பயிற்சி மட்டுமல்ல, அது மனதை அமைதிப்படுத்தி, சமூக உறவுகளை வலுப்படுத்த உதவும் ஒரு சிறந்த கருவி. சங்க இலக்கியங்களில் குறிப்பிடப்பட்டுள்ள விளையாட்டுகளை ஆராயவும் சங்க கால மக்களின் வாழ்க்கை முறையைப் புரிந்து கொள்ளவும் சங்க கால மக்களின் உளவியல் பற்றிய சிந்தனைகளை அறிந்து, இன்றைய காலகட்டத்தில் சங்க கால விளையாட்டுகளை விளக்குவதாக இவ்வாய்வு திகழ்கிறது.*

**திறவுச் சொற்கள்**

*சங்க இலக்கியங்கள், விளையாட்டு, உளவியல், தமிழ் இலக்கியம், சங்க காலம், உணர்ச்சிகள், சமூக உறவுகள், பண்பாட்டு மதிப்புகள்.*

## முன்னுரை

*சங்க இலக்கியங்கள், தமிழரின் தொன்மையான வாழ்வியலை, பண்பாட்டை, உணர்வுகளை நம்முன் நிறுத்துகின்றன. இலக்கியம் என்பது வெறும் சொற்களின் தொகுப்பு மட்டுமல்ல. அது ஒரு காலகட்டத்தின் மக்களின் மனோபாவத்தை, அவர்களின் வாழ்க்கை முறையை, அவர்கள் எதிர்கொள்ளும் சவால்களைப் பிரதிபலிக்கிறது. சங்க இலக்கியங்களில் விளையாட்டு என்பது பொழுதுபோக்காக இல்லாமல், உளவியல், சமூக உறவுகள், பண்பாட்டு மதிப்புகள் பற்றிய பல அம்சங்களை வெளிப்படுத்துகிறது. உளவியல் பார்வையில் விளையாட்டு என்பது மனித வாழ்க்கையின் ஓர் அங்கமாகும். இது குழந்தையின் வளர்ச்சிக்கு மட்டுமல்ல, அவர்களின் மன அமைதிக்கும் அவசியமானது. சங்க காலத்தில் விளையாட்டு, சமூக ஒருமைப்பாட்டை ஏற்படுத்தி, உடல் மற்றும் மன ஆரோக்கியத்தை மேம்படுத்த உதவியது. சங்க கால மக்கள் பல்வேறு விளையாட்டுகளில் ஈடுபட்டனர். அவர்களின் உடல் வளர்ச்சிக்கு அவை பெரிதும் உதவியது. விளையாட்டுகள் மூலம் அவர்கள் போட்டி மனம், ஒத்துழைப்பு, தலைமைத்துவம் போன்ற குணங்களை வளர்த்துக் கொண்டனர். குழுவாக விளையாடும் போது, அவர்கள் தங்களுக்குள் நல்ல உறவை ஏற்படுத்திக் கொண்டனர். சிரிப்பு, மகிழ்ச்சி, வருத்தம் போன்ற உணர்ச்சிகளை*

விளையாட்டின் மூலம் வெளிப்படுத்தினர். இவ்வகையில் சங்க இலக்கியங்களில் விளையாட்டையும் உளவியல் கூறுகளை எடுத்துரைப்பதாக இக்கட்டுரை அமைகிறது.

## ஐந்திணை விளையாட்டுகள்

குறிஞ்சி நிலத்தில் புனலாடுதல், பூக்கொய்தல் போன்ற விளையாட்டுகள் நிலத்தின் இயற்கை அழகை பிரதிபலிப்பவையாகவும் முல்லை நிலத்தில் கால்பந்து, குத்து போன்ற போட்டி விளையாட்டுகளும் இந்நில மக்களின் துணிச்சலையும் வீரத்தையும் காட்டுகின்றன. மருத நிலத்தில் மக்கள் விவசாயம் சார்ந்த விளையாட்டுகளில் ஈடுபட்டனர். நெய்தல் நிலத்தில் கடற்கரையில் நடத்தப்படும் விளையாட்டுகள் நெய்தல் நில மக்களின் வாழ்க்கை முறையைப் பிரதிபலிக்கின்றன. பாலை நிலத்தில் பாலை நில மக்கள் தங்களது கடினமான வாழ்க்கை முறையிலிருந்து விடுபட்டு, சிறிது நேரம் மகிழ்ச்சியாக இருக்க விளையாட்டுகளில் ஈடுபட்டனர்.

## உளவியல் பார்வையில் சங்க இலக்கிய விளையாட்டுகள்

சங்க இலக்கியங்களில் விளையாட்டுகள் மூலம் நாம் பல உளவியல் அம்சங்களைப் பெறமுடியும். சங்க கால மக்கள் மிகவும் உணர்ச்சிவசப்பட்டு வாழ்ந்தனர். அவர்களின் மகிழ்ச்சி, வருத்தம், கோபம் போன்ற உணர்ச்சிகள் விளையாட்டின் மூலம் வெளிப்பட்டன. விளையாட்டுகள் மூலம் அவர்கள் தங்களுக்குள் நல்ல உறவை ஏற்படுத்திக் கொண்டனர். இதனால் சமூக உறவு மேம்பட்டது. விளையாட்டுகள் மூலம் அவர்களின் பண்பாட்டு மதிப்புகள் வெளிப்பட்டன. மேலும் அவர்களின் வாழ்க்கை முறை பற்றிய சிறந்த பொருண்மைகள் கவனம் ஈர்த்தன. விளையாட்டுகளின் உளவியல் தாக்கங்கள் என்று பார்க்கும் போது, சங்ககால விளையாட்டுகள் பெரும்பாலும் குழு விளையாட்டுகளாக இருந்தன. இவை மக்களிடையே ஒற்றுமையையும், கூட்டுறவு மனப்பான்மையையும் வளர்த்தன. குழு விளையாட்டுகள் மூலம் தலைமைத்துவப் பண்புகளும், பிறரை மதித்து நடக்கும் பண்பும் வளர்ந்தது. விளையாட்டுகள் தனிமனிதனின் மன வளர்ச்சிக்கும் பெரிதும் உதவின. வெற்றி தோல்விகளைச் சமமாக எதிர்கொள்ளும் மனப்பக்குவம், போட்டி மனப்பான்மை, தன்னம்பிக்கை போன்ற பண்புகள் விளையாட்டுகள் மூலம் வளர்ந்தன. குழந்தைகளின் விளையாட்டுகள் அவர்களின் கற்பனைத் திறனை வளர்த்தன. மணற்சோறு சமைத்தல் போன்ற விளையாட்டுகள் குழந்தைகளின் படைப் பாற்றலை மேம்படுத்தின. சிறுதேர் ஓட்டுதல் போன்ற விளையாட்டுகள் இயக்கத் திறன் களை வளர்த்தன. சங்க இலக்கியங்களில் குழந்தைகளின் விளையாட்டுகள் பற்றிய குறிப்புகள் ஏராளமாகக் காணப்படுகின்றன. சிறுதேர் ஓட்டுதல், மணற்சோறு சமைத்தல், பந்து விளையாட்டு, ஓடி விளையாடுதல் போன்ற விளையாட்டுகள் குறிப்பிடப் படுகின்றன. இவை குழந்தைகளின் உடல் மற்றும் மன வளர்ச்சிக்கு உதவியது.

## சங்க இலக்கியப் பாடல்களில் விளையாட்டு

**தொடலை ஆயமொடு கடல் உடன் ஆடியும்,**
**சிற்றில் இழைத்தும், சிறு சோறு குவைஇயும்,**
**வருந்திய வருத்தம் தீர, யாம் சிறிது**
**இருந்தனமாக, எய்த வந்து,**
**தட மென் பணைத் தோள் மட நல்லீரே!**
(அகம் .110)

இப்பாடல் குறிப்பிடும் தொடலை என்பது தொட்டு விளையாடும் விளையாட்டாகும். நாங்கள் அனைவரும் சேர்ந்து ஓடித் தொட்டும் கடலில் இறங்கியும் விளையாடினோம். சிறுவீடு கட்டிச் சிறுசோறு ஆக்கியும் களைப்பைப் போக்க ஓரிடத்தில் அமர்ந்திருந்தோம் என்ற தலைவி தோழியர்கள் விளையாடிய செதிகள் காணலாகின்றன.

**கொடுவரி வழங்கும் கோடு உயர் நெடு வரை,**
**அரு விடர்ச் சிறு நெறி ஏறலின், வருந்தி,**
**தடவரல் கொண்ட தகை மெல் ஒதுக்கின்,**
**வளைக் கை விறலி என் பின்னள் ஆக,**

பொன் வார்ந்தன்ன புரி அடங்கு நரம்பின்
(புறம்.135)

பொதியமலையைச் சூழ்ந்த நாட்டை அரசன் ஆய் ஆட்சி புரிந்து வந்தான். அவன் பெருங்கொடையாளி. அவனது நாட்டின் சிறப்பைக் கூறுமிடத்து, வரிப்புலி விளையாடும் உயர்ந்த மலையின் சிறு வழியில் ஏறுவதால் வருத்தமுற்று, தடவிக் கொண்டு நடக்கும் விறலி என் பின்னே வந்தால் என்பதான உரையாடல்வழி புளிகள் விளையாடும் இடம் என்பது புறநானூற்றுப் பாடலால் கண்டு உணரப்படுகிறது.

சில் மெல் ஒதுக்கமொடு மென்மெல இயலி, 'நின்
அணி மாண் சிறுபுறம் காண்கம்; சிறு நனி
ஏகு" என, ஏகல் நாணி, ஒய்யென
மா கொள் நோக்கமொடு மடம் கொளச் சாஅய்,
நின்று தலை இறைஞ்சியோளே; அது கண்டு,
(அகம்.261)

சங்ககாலத்தில் பெண்கள் அழகைப்பிற பெண்கள் ஆராய்ந்து மதிப்பிட்டனர். இப்படி ஆராய்ந்து மதிப்பிடுவதற்கு ஏதுவாகப் பெண்கள் தம்மை அழகுபடுத்திக் கொண்டு சிறந்த நடையைக் காட்டியிருக்கின்றனர். இச்செய்தியை அகநானூறு வெளிப்படுத்து கின்றது. உன் வளையலும், சிலம்பும் இசைக்கும்படி கொஞ்சம் நடந்தாய். பின்னழகைக் காணவேண்டும் என்று கேட்கும்போது அவள் நடக்க நாணினாள் என்பதும் புலனாகிறது.

விளையாடு ஆயமொடு ஓரை ஆடாது,
இளையோர் இல்லிடத்து இற்செறிந்திருத்தல்
அறனும் அன்றே; ஆக்கமும் தேய்ம்" என
குறு நுரை சுமந்து, நறு மலர் உந்தி,
பொங்கி வரு புது நீர் நெஞ்சு உண ஆடுகம்,
(நற்.68)

தோழியர்களோடு, ஓரை விளையாடாமல் வீட்டிலேயே முடங்கிக் கிடத்தல் சிறப்பு ஆகாது. விளையாடாமல் இருந்தால் உடல் குன்றும். அதனால் புதுவெள்ளம், மலர்களை அடித்துக்கொண்டு வர அதில் நீராடி வருகிறோம் என்ற செய்தியும் இதன் மூலம் தெளிவாகிறது.

## முடிவுரை

தமிழ்இலக்கிய வரலாற்றில் பொற்காலமாகக் கருதப்படும் சங்க இலக்கியங்களில் மக்களின் வாழ்வியல் முறைகள், பண்பாடு, கலாச்சாரம் எனப் பல்வேறு அம்சங்கள் விரிவாகப் பதிவு செய்யப்பட்டுள்ளன. அவற்றில் விளையாட்டு களும், அவற்றின் உளவியல் தாக்கங்களும் குறிப்பிடத்தக்க இடம் பெற்றுள்ளன. சங்ககால விளையாட்டுகள் வெறும் பொழுதுபோக்கு அம்சங்களாக மட்டுமல் லாமல், ஆழமான உளவியல் தாக்கங் களையும் கொண்டிருந்தன. இவை தனிமனித மற்றும் சமூக வளர்ச்சிக்கு பெரிதும் பங்களித்தன. இன்றைய காலகட்டத்தில் பாரம்பரிய விளையாட்டுகளின் முக்கியத்து வத்தை உணர்ந்து, அவற்றை மீண்டும் புத்துயிர் பெறச் செய்வது காலத்தின் கட்டாயமாகும் என்பது இக்கட்டுரையின் வாயிலாக உணர்த்தப்பட்டுள்ளது.

## துணைநூற்பாட்டியல்


- சங்க இலக்கியம் (மூலமும் உரையும்)., நியூ செஞ்சுரி புக் ஹவுஸ் (பி) லிட்., சென்னை -600050., 2013.
- முனைவர் ச.அகத்தியலிங்கம்., சங்க இலக்கியம் செவ்வியல் பார்வை., மெய்யப்பன் பதிப்பகம்., சிதம்பரம்-608 001., 2017.
- அ.தட்சிணாமூர்த்தி., தமிழர் நாகரிகமும் பண்பாடும்., யாழ் வெளியீடு., சென்னை., பதிப்பு 2011.
- தி.சு.நடராசன்., தமிழர் பண்பாட்டு வெளிகள், நியூ செஞ்சுரி புக்ஹவுஸ்., சென்னை., பதிப்பு 2019.
- டாக்டர் மா.இராசமாணிக்கனார்., தமிழகக் கலைகள்., பன்மை வெளி வெளியீடு., சென்னை., பதிப்பு 2023.